The Indian Law Journal

Promptly reporting all the Important decisions of the Several High Courts and Chief Courts in India and Burma

Published Every Fortnight

Yearly, half-yearly or quarterly subscription of Rs. 20, 10 or 5, respectively or **Each fortnightly issue sent by V. P. P. at Re. 1.**

RATES OF ADVERTISEMENT

	Per month. 2 insertions	Half year. 12 insertions	Year. 24 insertions
Full page	Rs. 10 0 0	Rs. 50 0 0	Rs. 100 0 0
Half page	„ 5 0 0	„ 25 0 0	„ 50 0 0
Quarter page	„ 3 0 0	„ 13 0 0	„ 26 0 0

Apply to :—

The Manager,

THE INDIAN LAW JOURNAL,

Madras, E.

ஸ்ரீ

பெரியாழ்வார் அருளிச்செய்த

திருப்பல்லாண்டும் பெரியாழ்வார் திருமொழியும்

இவை வைத்த மாநிதி—முடும்பை

கோபாலகிருஷ்ணமாச்சாரியார் அவர்களால்

உரையுடன் இயற்றப்பட்டது.

இதனுள் அடங்கியவை.

1. பெரியாழ்வார் சரித்திரம்
2. திருப்பல்லாண்டு (உரையுடன்)
3. பெரியாழ்வார் திருமொழி (உரையுடன்)
4. செய்யுள் முதற்குறிப்பு அகராதி

குறிப்பு:—இதில் அவசியமான பதப்பிரயோஜனங்களையும் இன்றியமையாத இலக்கணக் குறிப்புகளையும், புராணக்கதைகளையும் எடுத்துக்காட்டி, பதப்பொருள், கருத்து, விசேஷார்த்தம், சொற்சுவை, பொருட் சுவை, யாப்பிலக்கணம், அணியிலக்கணம், ஐதிஹ்யம் அங்கங்கே விளக்கியிருத்தலோடு ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயங்களையும் விவரிக் கப்பட்டிருக்கிறது. பூர்வாசார்யர்களின் வியாக்கியான வாக்கியங்க ளும் உரியஇடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. அத்தியாபகற்கு மிகவும் அனுகூலமாகயிருக்கும். இதன் விலை ரூ. 1 4 0.

தபால் கூலி பிரத்தியேகம்.

மானேஜர், "இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்,"

117, அரமனைக்காரத் தெருவு, சென்னை.

344

OFFICE OF THE ... 22 JAN 1915 ... MA...

Registered No. M. 1124.

Vol. I] [No. 9.

இந்தியன் லா ஜர்னல்

(மாதம் நான்குமுறையாக பிரதி சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது.)

1914ஸு அக்டோபர்மீ 10வ சனிக்கிழமை.

ரிபோர்ட்டுகள்.

ஹைகோர்ட் தீர்ப்புகள்.

PRINTED AND PUBLISHED BY S. SUBRAMANYA AIYAR,
AT THE INDIA PRINTING WORKS, 117, ARMENIAN STREET, MADRAS.—15—1—1915.
(ALL RIGHTS RESERVED.)

THE INDIAN LAW JOURNAL.

(TAMIL EDITION.)

இந்தியன் லா ஜர்னல்.

(தமிழ் பிரசுரம்.)

(மாதம் நான்குமுறை ஒவ்வொரு சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது.)

வருஷசந்தா.

	ரூ.அ.பை.
இந்தியா, பர்மா, ரெங்கூனுக்கு தபால் சார்ஜ் உள்பட	6—0—0
சிங்கப்பூர் பினங்கு	8—0—0
ஒரு வார சஞ்சிகை	0—4—0

பத்திரிகை வேண்டியவர்கள் சந்தாத் தொகையை அனுப்பி கடிதம் எழுதவேண்டும். இல்லாவிடில் வி. பி. தபாலில் அனுப்பும்படி உத்திரவு செய்யவேண்டும்.

மாதிரி சஞ்சிகை வேண்டியவர்கள் ½ அணா தபால் ஸ்டாம்பு அடக்கம் செய்து அனுப்பவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

	ரூ. அ. பை.
48 சஞ்சிகைகளிலும் ஒரு வருடத்திற்கு ஒரு பக்கத்திற்கு	60—0—0
6 மாதங்களுக்கு ...	30—0—0
3 ,, ...	15—0—0

இந்த பிரகாரம் பாதி பக்கத்திற்கும், கால் பக்கத்திற்கும் கணக்கு செய்துகொள்ளவேண்டும். சாஸ்வத ஒப்பந்தம் செய்கிறவர்கள் மானேஜருடன் பிரத்யேக ஏற்பாடு செய்துகொள்ளலாம்.

விளம்பரம்.

இந்தியன் லா ஜர்னலுக்கு சந்தாதார்கள் சேர்க்க கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

மானேஜர்,

இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்,

117, அரமனைக்காரத் தெரு, சென்னை.

இந்தியன் லா ஜானல்

மாதம் நான்கு முறை· ஒவ்வொரு சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது·

Vol. I. / தொ. I. | 10TH OCTOBER 1914. | No. 9. / நெ. 9.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
22 JAN 1915
MADRAS.

முக்கிய அறிவிப்பு.

வகு சந்தாதாரர்களின் வேண்டுதல்படி இந்த சஞ்சிகை முதல் வெளியிடப்படும் ஹைகோர்ட்டு தீர்மானங்களை ஸிவில், கிரிமினல் என்று வரையிட்டு, ஓயாமல் வியவசாயிகளுக்கு ஏற்படும் ரிவினியூ வியவாஹாரங்களுக்குறிய விஷயங்களையும் சுலப நடையில் அச்சிடலாகும்.

DIEU ET MON DROIT

இந்தியன் லா ஜர்னல்.

1914ஷு அக்டோபர்மீ 10உ சனிக்கிழமை.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஐகோர்ட்டு.

தீர்மானங்கள்·

1911-ஷுத்திய இரண்டாவது அப்பீல் நெம்பர்கள் 892 முதல் 912 வரையிலும், 914 முதல் 922 வரையிலும்.

ஜட்ஜிகள் :—சதாசிவய்யர்.
ஸ்பென்ஸர்.

1914-வது வருஷம் ஜனவரிமீ 28உ.

V முத்துகுமாரசெட்டி—அப்பீல்வாதி.

v.

அந்தோனி உடையானும் மற்றவர்களும். } அப்பீல் பிரதிவாதிகள்.

லாபாயின்ட்:—ஒரு ஜமீன்தார், தன்னுடைய பெண்ஜாதிக்கும், மைனர் குமாரனுக்கும் செய்த நிலசாஸனம் கீழ்வரைந்தவாறு எழுதப்பட்டது.

M என்பவளுக்காகவும் அவளுடைய மைனர் குமாரனுக்காகவும் * * * கட்டிடங்களையும் தோட்டங்களையும் * * * கொடுத்துவிட்டேன். M என்பவளுடன் இருவருடைய ஜீவனம், ஆடை, இன்னுமிதர செலவு முதலியவைகளுக்காக அவைகளை விட்டுவிட்டேன். M என்பவள் அச்சொத்துகளைப் பிரதிவாதிகளுக்குக் குத்தகையாக விட்டுவிட்டாள்.

1. மேற்சொல்லிய தஸ்தாவேஜு, மேற்படி சொத்துக்களை பரிபாலனம் செய்யத்தக்க பாத்தியதையோடுகூட சாஸனம் பெற்றவருக்கு நிராடங்கமான பாத்தியதையை யுண்டாக்கியதென்றும் ;

2. தாயின் வாழ்நாள்வரையில், தாயும் குமாரனும் ஸ்திர சுக்வாசிகளாகவும், தாய்க்குப் பிந்தி முழுமையையும் குமாரன் அனுபவிக்கும்படி பாத்தியம் கொடுக்கப் பெற்றார்களென்றும் ;

3· தஸ்தாவேஜின்படி சாஸனம் அடைந்தவர்கள் தாங்கள் நேராக சொத்துக்களை அனுபவிக்க வற்புறுத்தப்பட வில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டன. சாஸனம் பெற்றவர் ஸ்திதியை அனுபவிப்பதற்கான பாத்ததியை ஒரு சாஸனம் குறிப்பிட்டபோதிலும், அவ்வேற்பாடு அவரை கட்டாயப் படுத்தாது. ஸ்திதியை சாஸனம் பெற்றவர் ஒரு பிரத்தியேக நீதியாய் அனுபவிக்கிறதற்கு சாஸனம்

வரம்பிடக்கூடும் ; ஆனால் அது வரம்பிட்டதாக எண்ணக் கூடாமையாயிருந்து, ஒரு பிரத்தியேக நீதியாய் அனுபவிக்க வேண்டுமென்ற கொள்கைமட்டும் ஏற்பட்டிருந்தால், மேற்படி ஷரத்து கட்டாயப்படுத்தமாட்டாது. 15 M. L. J. 7, 10 Bombay 342, 34 Madras 7, 16 C. W. N. 99, 32 Calcutta 683. ஜீவனாம்சத்திற்கான சாஸனங்களின் வகையில் பராதீனங்களைத் தடுப்பதற்கானவிதி ஹிந்துலாவில்கிடையாது. ஆயினும், சாஸனம் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குப் பிந்தி பராதீனம் செல்லத்தக்கதல்ல.

தீர்மானம்.

விவகாரச் சுருக்கம்:—கந்தர்வகோட்டை ஜமீன்தார், வியாஜ்ஜியத்தில் சம்பந்தப்பட்ட நிலங்களையும், இன்னும் மற்ற சொத்துக்களையும், N குறிப்பிட்ட தஸ்தாவேஜின் மூலமாய் 1901-வது வருஷத்தில் தன்னுடைய பாரியாள் மதுராம்பாளுக்கும் மைனர் குமாரனுக்கும் சாஸனம் செய்தார். இந்த வியாஜ்ஜியங்களின் வாதிக்கு 15 வருஷ காலத்திற்கு 1906-வது வருஷத்தில் மதுராம்பாள் குத்தகை தஸ்தாவேஜு எழுதிக்கொடுத்துவிட்டாள். குத்தகைதஸ்தா வேஜு மூடிந்த சில மாதங்களுக்குப் பிறகு அவள் இறந்துவிட்டாள். மதுராம்பாள் இறந்த பிறகு, வாதிக்கும், மைனர் குமாரனுக்காகவென்று வந்த ஜமீன் தாருக்கும் விவாதங்களேற்பட்டன. கிரிமினல் விவகாரங்களுக்குப் பிறகு இரண்டு சிவில் தாவாக்கள் செய்யப்பட்டன ; அவைகளிலொன்று குத்தகையை ரத்து செய்ய தன் குமாரனுக்காக ஜமீன்தாராலும், மற்றொன்று, குத்தகையை அனுசரித்தத் தன் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்யவொட்டாமல் ஜமீன்தாரை மறிக்க குத்தகை பெற்றவனாலுங் கொண்டு வரப்பட்டன. நேரில் ஆஜராகும்படி கோர்ட்டார் செய்த உத்திரவை ஜமீன்தார் நிராகரித்ததினால், முன்சொல்லிய தாவா தள்ளிவிடப்பட்டது ; ஜமீன்தாருடைய தாவா தள்ளுபடியானதைக் கொண்டு பின் சொல்லியவியாஜ்ஜியம் வாதியால் வித்ட்ரா செய்துகொள்ளப்பட்டது. முதல் தாவா தள்ளுபடியின் யுக்தாயுக்தம் ரிவிஷன் பெடிஷன் மூலமாய் பரிசீலனைக்கு வந்தது. குத்தகை தஸ்தாவேஜில் சம்பந்தப்பட்ட மைனரை வியாஜ்ஜியத்தில் சேர்க்காததைக்கொண்டு குத்தகைதாரனால் கிஸ்திக்காக கொண்டுவரப்பட்ட தாவாக்களைக் குடித்தினக்காரர்கள் மறுதளித்தார்கள். N குறிப்பிட்ட தஸ்தாவேஜின் அர்த்தத்தின்பேரில், கிஸ்தி தாவாக்களை மறுதளிக்கக் காரணங்கள் அநேகமாய்ச் சார்ந்தன.

1. N குறிப்பிட்ட தஸ்தாவேஜு மதுராம்பாளுக்குச் சாஸனத்தில் கண்ட சொத்துக்களை ஸ்திரமாக அடையாமல் மேல் விசாரணை செய்யமட்டும் பாத்தியதை உண்டாக்கியதாவென்கிற அம்சம் முதலில் பரிசீலிக்க வேண்டியதா யிருக்கிறது. மதுராம்பாளுக்கு மேல் விசாரணை செய்யமட்டுமுள்ள பாத்தியதையை மேற்சொல்லிய தஸ்தாவேஜு உண்டாக்கினதாக எண்ணக் கூடாதென்பதில் எங்களுக்குச்சந்தேகமில்லை. தஸ்தாவேஜின் ஷரத்துகளின் ஸ்பஷ்டமான கருத்தை மறுதளிக்க தஸ்தாவேஜில் ரத்துகளே காணப்படவில்லை. குடித்தனக்காரர்களிட மிருந்த தீர்வையை வசூலிக்க 1865-வது வருஷத்திய 8-வது சட்டத்தின்படி மதுராம்பாளுக்குள்ள பாத்தியதையைப் பற்றிய சந்தேகங்களை விலக்க, பட்டாக்கள், முச்சிலிக்காக்கள் மாற்றிக் கொள்ளுவதற்கும், தீர்வை வசூலிக்கும் ஷரத்து உண்டாக்கப்பட்டது. அந்த அம்மாள் ஏஜெண்டாகவாவது அல்லது ஏஜெண்டுக்குச் சமமான நிலைமையிலாவது எண்ணப்பட்டதாக சூசிப்பிக்க தஸ்தாவேஜில் ஒரு பதமாவது இல்லை. மதுராம்பாள் காலத்திற்குப்பிறகு அக்கிராமங்

களை மைனர் குமாரனை இராஜகோபாலன் அனுபவிக்க வேண்டுமென்று மற்ருெரு ஷரத்தும் கண்டிருக்கிறது. அந்தத் தஸ்தாவேஜினுல் தன்னுடைய ஜீவின காலம்வரையில் ஸ்திதியை ராஜகோபாலன் அனுபவிக்க பாத்தியதையை அடைந்தானென்கிறதில் சந்தேகமில்லை. N குறிப்பிட்ட தஸ்தாவேஜினுல் ராஜகோபாலனுக்கு ஸ்திதி ஸ்திரமாக ஏற்படவில்லையா என்கிற அம்சத்தைப்பற்றி அபிப்பிராயம் கொடுக்க இந்த வியாஜ்ஜியத்தின் அவசியமில்லை.

2. மைனர் ராஜகோபாலனுக்குப் பாத்தியம் ஏற்படவில்லையா யென்பது மற்ருெரு அம்சம். N குறிப்பிட்ட தஸ்தாவேஜினுல் தாயாருடைய மரணபரியந்தம் ராஜகோபாலனுக்கு ஸ்திதிக்குப் பாத்தியதை ஏற்படாததினுல் மைனர் குமாரனுக்காகக் குத்தகைச் சீட்டை எழுதிக்கொடுக்க மதுராம்பாளுக்குப் பாத்தியமில்லையென்று தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் அபிப்பிராயப் படுகிருர். இந்த அபிப்பிராயத்தை நாங்கள் அங்கீகரிக்கத் தக்கதல்ல. சாஸனம் இருவருக்கென்றும், தனக்காகவும் தன்குமாரனுக்காகவும் சொத்தின் சுவாதினத்தை மதுராம்பாள் அடைய வேண்டுமென்றும், N குறிப்பிட்ட தஸ்தாவேஜினுல் ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது. அந்த அம்மாள் காலம் வரையில் பாத்தியதை செலாமணியாய், அதற்குப்பின் ஸ்திதி முழுமையையும் ராஜகோபாலன் அனுபவிக்கத்தக்கவன். சாஸனத்தைக்கொண்டு ஸ்திதியில் ஸ்திரபாத்தியதையை மைனர் அடைந்தானென்று நாங்கள் அபிப்பிராயப் படுகிருேம்.

3. சாஸனத்தின் ஷரத்துகளினுல், சாஸனம் பெற்றவர்கள் சொத்தை நேராக அனுபவிக்கக் கட்டுபடுத்தப் படுவார்களா வென்பது மற்ருெரு விவாதம்சம். இம்மாதிரி ஊகையை ஆதரிக்க தஸ்தாவேஜில் ஷரத்துகள் உண்டென்று நாங்கள் நினைக்கக்கூடவில்லை. சாஸனம் பெற்றவர்களின் ஜீவனும்சத்திற்குச் சொத்துக் கொடுக்கப்பட்ட தென்பதில் சந்தேகமில்லை. ஆனுல், சாஸனம் பெற்றவர்கள் சொத்தை நேராக அனுபவிக்கக் கட்டுபடுத்தப்பட்டார்கள் என்பதற்குப் போதுமானதல்ல. மைனர் குமாரனுடைய வித்தியா விஷயச்செலவுக்காக சாஸனத்தில் 11, 12 நெம்பர்களிட்ட சொத்துக்கள் கண்டிருப்பதாக எங்களுக்கு எடுத்துக் காட்டப்பட்டது. இவைகளில் ஒன்று புஞ்சை நிலமாகவும், மற்ருென்று கட்டிடத்தோடு கூடிய இடமாகவும் இருக்கின்றன. அந்தக்கட்டிடத்தில் மைனர் வசிக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்க வில்லை. மேலும், மைனர் வசிக்கக்கூடிய கட்டிடத்தின் நிலத்தில் புஞ்சை நிலம் சேர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. இவ்விரண்டு தாக்குகளின்வரும்படிகள் மைனருடைய வித்தியா விஷயச்செலவுகளுக்கு உபயோகப் படுத்தப்படவேண்டுமென்பதாக அப்பீல்வாதி தரப்பில் சொல்லப்பட்ட வாதத்துக்குத் தஸ்தாவேஜு பூர்த்தியாகப்பொருந்துகிறது. அப்பீல் பிரதிவாதி தரப்பில் எடுத்துக் காட்டிய ஆதாரங்கள் இவ்விவகாரத்திற்கு அன்வயப்படாதென்றும், N குறிப்பிட்ட தஸ்தாவேஜினுல் சாஸனம் பெற்றவர்களுக்கு அனுபவம் கட்டு படுத்தப்படவில்லையென்றும் நாங்கள் தீர்மானிக்கிருேம்.

4. சாஸனம் பெற்றவர்களால் செய்யும் பராதீனத்தைத் தடுக்கும் ஷரத்து செல்லத்தக்கதா வென்பது மற்ருெரு விவாதாம்சம். ஆஸ்தி பரிவர்த்தனை சட்டத்தின் 10-வது பிரிவினுல் பராதீனம் தடுக்கப்பட்ட போதிலும் குத்தகைக் கொடுக்கும் நபர் அல்லது அந்நபரைச் சார்ந்தவர்களின் பிரயோஜனத்துக்குக்கொடுக்கப்படும் குத்தகை விலக்கப்பட்டிருக்கிறது. ஜீவனும்சத்திற்காகக் கொடுக்கப்படும் ஸ்திதிகளின் பராதீனங்களைத் தடுக்க ஹிந்துலாவில் விதியுண்டென்று நினைக்கவிட

மில்லை. சாஸனம் வியாபிக்கும் காலத்திற்குப் பிந்திப் பராதீனம் செல்லாதென்பது வாஸ்தவமே. அப்பீல் பிரதிவாதிகளின் வாதத்துக்கு ஒற்றுமையாயிருப்பதாக எடுத்துக் காட்டிய ஆதாரங்கள் ஜீவனும்ச சாஸனத்தில் கண்ட சொத்துக்களின் பராதீனத்தைக் கட்டுப்படுத்த ஹிந்து லாவில் பிரத்தியேக விதி யுண்டென்று ஸ்திரப்படுத்தவில்லை.

5. தன்னுடைய மைனர் குமாரனுக்காகக் குத்தகைச் சீட்டை எழுதிக்கொடுக்க மதுராம்பாளுக்குப் பாத்திய மில்லையாவென்பது வேறொரு பிரசம்சை. N குறிப்பிட்ட தஸ்தாவேஜினால் மைனருக்கு மதுராம்பாள் கார்டியனென்பதாகக் களங்கமில்லாமல் நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம். மைனர் அந்தம்மாளுடைய சம்ரக்ஷணையிலிருப்பதாகக் கண்டு அந்தம்மாளுக்காகவும் மைனருக் காகவும் மேற்சொல்லிய தஸ்தாவேஜு எழுதிக்கொடுக்கப் பட்டிருக்கிறது. தனக்காகவும் தன்குமாரனுக்காகவும் சொத்தை அந்தம்மாள் அனுபவிக்கத் தக்கவளாகயிருக்கிறாள். குமாரன் தாயோடிருக்கத் தக்கவன். குமாரனுடைய கார்டியன் பாத்தியதையை ஜமீன்தார் பூர்த்தியாக விட்டுவிடாமலிருக்கலாம்; ஆனால், N குறிப்பிட்ட தஸ்தாவேஜினால் அதில்கண்ட சொத்துக்களுக்கு அந்தம்மாள் மைனர் கார்டியனாய் விட்டாளென்பதற்கையமில்லை. குமாரனுடைய சொத்துக்கள் விஷயமாய் நடவடிக்கை நடத்தத் தாயாருக்குப் பாத்தியமில்லை யென்பதாகச் சொல்லி குத்தகை ஆக்ஷேபிக்கத் தக்கதல்ல.

6. குமாரனுடைய யுக்த வயதுக்குப் பின் ஐந்து வருஷம் வரையில் வியாபிக்கக் கூடிய 15 வருஷத்திய குத்துகை செல்லாத தாக நினைக்கப்படுமாவென்பது வேறொரு அரம்சம். அது பூர்ணமாக செல்லத்தகாத தானால், தங்களிடமிருந்து தீர்வையை வசூலிக்க முயன்ற வாதியை பிரதிவாதிகள் நிராகரிக்க இடமிருக்கும் ஆனால், கார்டியனால் தன் அதிகாரவரம்பை மீறி எழுதிக்கொடுத்த குத்தகை பூர்ணமாய் மைனருக்கு விரோதமாய்ச் செல்லத்தகாத தல்லவென்றும், மைனரால் செல்லாததாகச் செய்யப்படலாமென்றும் தீர்மானிக்கப் படவேண்டும். அநேக ஆதாரங்களைக் கொண்டு மதுராம்பாள் ஏற்படுத்திய குத்தகையை மைனரால் செய்யும் வியாஜ்ஜியத்தில் செல்லத்தகாததாகக் கூடியதென்று நாங்கள் தீர்மானிக்கவேண்டும்.

7. சட்டப்படி குத்தகை நிராகரிக்கப் படாத வரையில் வாதிக்குத் தீர்வை செலுத்த பத்தர்களல்லவென்று பிரதிவாதிகள் வாதஞ்செய்ய இடமில்லையென்று அப்பீல் வாதியின் முறை வெளியாயிற்று. இவ்வாதத்தின் நியாயத்தை மறுதளிக்காமலே குத்தகை நிராகரிக்கப்பட்டதாக வாதிக்கப் படுகின்றது. ரெங்காச்சாரியருடைய வாதத்தை நாங்கள் அங்கீகரிக்கமாட்டோம். ராஜகோபாலனுக்கு யுக்த வயது வந்ததும் குத்தகையைத் தான் நிராகரிக்க வேண்டுமென்று எண்ணங் கொண்டால் தாவா செய்யாமல் நிச்சந்தேகமாய் அவன் நிராகரிக்கக்கூடும். மற்ற யாரும் அப்படி செய்யக்கூடுமோ? ஒருமைனர் தன்னுடைய மைனர் திசையில் தான் செய்த உடன்படிக்கையைத் தான் மறுக்கலாமென்பதற்குக் கொஞ்சம் ஆதாரம் காணப்படுகிறது. ஒருகார்டியன், சகஜ ஸ்திதியிலேயோ அல்லது நேமகப்பட்ட ஸ்திதியிலேயோ குத்தகை விட்டபோது, மற்றொரு கார்டியன் தன்னுடைய செய்கையினாலே முன் குத்தகையை மறுக்க அல்லது நிவிர்த்திக்கக் கூடுமாவென்பதைப் பற்றி ஆதாரமே காட்டப்படவில்லை; மேலும், காணப்படுகிற ஆதாரங்களினால், தன் கார்டியன் செல்லத் தகாததாகச் செய்வதற்கு ஸ்பஷ்டமாய் உட்படுத்தப்பட மாட்டான். மைனருடைய மைனர் திசையில் குத்தகையைக் கோர்ட்

டைக் கொண்டு ரத்து செய்யத் தாவா கொண்டு வரலாம்.

சகஜ கார்டியனுயிருக்கும் ஜமீன்தார் தன் னிஷ்டப்படி மறுதளிப்பதினுல் குத்தகையை ரத்து செய்யத் தகாதவனென்றும், கோர்ட் டிக்கிரியைப் பெற்றே அவ்விதம் செய்யத்தக் கவரென்றும் நாங்கள் தீர்மானிக்க வேண்டும் முடிவில் ராஜகோபாலனுக்கு விரோதமாய் குத்தகை இன்னும் செல்லத்தக்கதென்று இன் னும் தீர்மானிக்கவேண்டும். இது மைனருக் காகக் கோர்ட்டினுல் ரத்து செய்யக் கூடியதா அல்லது யுக்தவயது வந்தபிறகு அவனுல் மற தளிக்கக் கூடியதாவென்ற அம்சத்தை இப் போது ஆலோசிப்பது அனுவசியம். மைனரு க்கு விரோதமாய் குத்தகை செல்லத்தக்கதா கையால் தீர்வைக்குள்ள வாதியின் பாத்தியதை யை வாதிகள் மறுக்கத் தக்கவர்களல்லர்.

உத்திரவு.

1316-1317ம் பசலிகளுக்குச் சேரவேண் டிய தீர்வை மொத்தம், பிரதிவாதிகள் பேஷ் கிஸ்தியைக் கட்டியதால் பரிகரிக்கப் பட்டதா வென்னும் அம்சத்தைத் தீர்மானிக்கவே ண்டும்.

தீர்ப்பு.

(1) 1316-1317 பசலிகளின் தீர்வையில் செலுத்துதலை ருஜு செய்யவேண்டிய பொறு ப்பு பிரதிவாதிகளைச் சார்ந்தது. ஆனுல் இந்த அம்சத்தைப் பற்றி அவர்களுக்குச் சாக்ஷிக் குறைவு பேஷ்கிஸ்திக்காகச் செலுத்தியதா கச் சொல்லப்படுகிறதே யொழியே பசலி குறிப்பிடப் படவில்லை.

(2) இந்த அம்சம் இவ்வியாஜ்ஜியம் விசார ணையானது முதல் கோர்ட்டில் விவாதாம்சமாக எடுக்கப்படவில்லை. ஜமீன்தாருக்குத் தீர்வை ஏற்கனவே செலுத்தி விட்டதால் குத்தகை தாரருக்கு மறுபடி தாங்கள் செலுத்தப் பத் தப்பட்டவர்களல்லவென்று பிரதிவாதிகள் அப் போது வாதித்தார்கள். ஆனுல், பிரதிவாதி களின் தரப்பின் சாக்ஷியத்தால் கொஞ்சபாகம் ஜமீன் தாரிடம் கொடுக்கப் பட்டதாகவும், ஜமீன் தாரரின் பாக்கிக்காக கவர்மெண்டாரால் செய்யப்பட்ட தங்கள் நிலங்களின் ஜப்தியை விலக்க கவர்மெண்டாரிடம் கொஞ்சபாகம் கொடுக்கப்பட்டதாகவும் சூசிபிக்கப் படுகிறது. வாதியினுடைய ஒப்புதலும் அப்படியே சாரு கிறது.

(3) 1316-1317 பசலிகளில் பேஷ்கிஸ்தி பிரதிவாதிகளால் செலுத்தப் பட்டதென்று ருஜு வேற்படவில்லை யென்பதாக நான் தீர்மா னிக்கிறேன். அப்படி கொடுக் கப்பட்டிருந் தால் கீழ் கோர்ட்டில் விவாதாம்சங்கள் ஏற் படுத்தியபொழுது அதை முன்னுக்குக் கொண் டுவராமல் பிரதிவாதிகள் இருந்திருக்க மாட் டார்கள்; சந்தேகத்துக்கு இடமில்லாமல் கை ச்சாத்துகளும் ஆஜர் செய்யப்படுத்தப் பட்டி ருக்கும். ஆகையால், இந்த அம்சத்தை வாதி க்கு அனுகூலமாய்த் தீர்மானிக்கிறேன்.

ஜில்லா ஜட்ஜிகளின் தீர்மானம் அங்கீகரிக்கப் பட்டு, 1316-1317 பசலிகளைப் பற்றிய அப் பீல் வாதியின் தாவாக்கள் ஒப்புக்கொள்ளப்பட் டன. இதனுல் நெ. 919 முதல் 922 வரையி லுள்ள வாதியின் தாவாக்கள் பூராவாக செலவு களுடன் தீர்மானிக்கப்பட்டன. நெ. 892 முதல் 912, 914 முதல் 918 வரையிலுள்ள அப்பீல் கள் எல்லா கோர்ட்டுகளின் செலவுகளுடன் தீர்மானிக்கப்பட்டன.

கிரிமினல் விஷயங்கள்.

I. மரண தண்டனை.

(*a*) விதிக்கக் கூடிய பிரிவுகள்:—இ. பி. கொ. 121—(இராஜங்கத்துக்கு விரோதமாய் யுத்தம்செய்வது); 132—(உடைந்தையினுலே ராணுவக் கலகஞ் செய்யப் பட்டால் அந்த

உடந்தைக்காக); 194—(பொய் சாட்சிச் சொன்னாலும் அல்லது உண்டு பண்ணினாலும் தண்டனை); 302, 303, 305—(கொலை செய்வதற்கு); 307 and 396—(கொலை செய்ய எத்தனப் படுவதும் கொள்ளை நடுவில் கொலை செய்தவனுக்கும்).

(*b*) மரண தண்டனை விதிக்கப்பட வேண்டி இ. பி. கொ. பிரிவுகள்:—303—(தீபாந்திர சிக்ஷை விதிக்கப் பட்டவன் கொலை செய்தால் அவனுக்கு மரண தண்டனை) அவசியம் விதிக்கப்பட வேண்டும்).

II. தீபாந்திர சிக்ஷைகள்.

(*a*) ஆயுஸு பரியந்தம் விதிக்கக் கூடிய இ. பி. கொ. பிரிவுகள் :—125—(சக்கிரவர்த்தியோடு தனது செய்து கொண்டு ஏஷியா கண்டத்திற் குள்ளிருக்கிற எந்த சமஸ்தானத்தின் பேரிலாவது யுத்தஞ்செய்தால்); 128—(சர்க்காருக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்த கைதிகளை யாவது, யுத்தத்தில் அகப்பட்டவர்களைத் தப்பித்துக் கொண்டு போய் விடும்படி ஓர் சர்க்கார் உத்தி யோகஸ்தன் தன் மனதாரச் சொன்னால்); 130—(சிறையாளி தப்பித்துக் கொண்டு போக உடந்தையாயிருந்தும் அல்லது அவனுக்கு இருக்க இடங் கொடுத் தவனுக்கும்); 132—(ராணுவக் கலகத்துக்கு உடந்தையாயிருந்தவனுக்கு); 222—(சர்க்கார் உத்தியோகஸ்தன் சிக்ஷைக் குள்ளானவனைப் பிடிக்க வேண்டியிருக்க, வேணுமென்று பிடியாதிருந்தால்); 225—(சட்டப்படி வேறொருவனைப் பிடிக்கவொட்டாமல் தடுத்தாலும் எதிர்த்தாலும் அவனுக்கு); 232—(சர்க்கார் நாணயத்தைப்போல கள்ளநாணயஞ் செய்வதைக் குறித்து); 238—(சர்க்கார் நாணயத்தைப் போல கள்ள நாணயத்தைக் கொண்டு போனாலும், கொண்டு வந்தாலும் அதற்கு); 255—(கவர்ன் மெண்டு முத்திரைக் கடுதாசி போல் உண்டு பண்ணினால் அதற்கு); 304—(கொலையாகாமல் அநியாய மரணமுண்டு பண்ணுவதென்னுங் குற்றத்திற்கு); 305—(தன்னைத் தான் கொலை செய்து கொள்ளும்படி சிறுவனுக்காவது, பயித்தியக்காரனுக்காவது உடந்தை யாயிருந்தால்); 307—(கொலை செய்ய எத்தனப் படுகை); 326—(அபாயமான ஆயுதங்களினாலாவது வெறே வகையினாலாவது மனதாரக் கொடுந் துன்ப முண்டுபண்ணுவதற்கு); 329—(சொத்தைப் பறிக்கவாவது, சட்டத்துக்கு விரோதமான யாதொருகாரியத்தைச் செய்யும்படி பலவந்தப் படுத்தவாவது, மனதார கொடுந்துன்ப முண்டு பண்ணுவதற் காகவாவது); 364—(கொலை செய்யும் பொருட்டு மனிதர்களைத் திருட்டுத் தனமாய்க்கொண்டு போனாலும், அக்கிரமமாயிட்டுக்கொண்டு போனாலும்); 371—(வழக்கமாய் அடிமைகளைக் கொள்வனை விற்பனை செய்துகொண்டிருந்தால்); 376—(துராக்கிரதமான புணர்ச்சிக்கு); 377—(சுபாவத்துக்கு விரோதமான புணர்ச்சி யென்னுங் குற்றங்களுக்கு); 389 — (மெரட்டி வாங்கும் பொருட்டு எவனையாவது குற்றஞ் சாட்டுவதாகபயப்படுத்துவதற்கு); 394—(கொள்ளையடிக்கையில் மனதாரத் துன்ப முண்டு பண்ணுவதற்கு); 396—(பலர் கூடி கொள்ளையடிக்கையில் கொலைசெய்வதற்கு); 477—(யாதொரு மரணசாஸனத்தை மோசடியாய்க் கிறுக்குதல், அழித்தல் முதலியவை செய்ததற்கு); 477A—(கணக்குகளை பொய்யாக்குவது). இத் தண்டனைகள் 7-வருஷத்துக் குறையாமலிருக்க வேண்டும்.

(*b*) தீபாந்திர சிட்சை விதிக்கப்பட வேண்டிய பிரிவுகள்:—226—(தண்ணீர் மேலேற்றப் பட்டவன் அக்கிரம மாய்த் திரும்பி வந்து விட்டால் அதற்கு); 311—(தந்தி திருடன் தீபாந்திர சிட்சையினின்று திருட்டுத் தனமாய்த் தப்பித்துக் கொண்டு வந்து விட்டதற்கு).

(c) (1) எக்காலத்துக்காகவாவது:—121(A)-(121-வது பிரிவின்படி தண்டிக்கக் கூடிய குற்றங்களைச் செய்ய சதியாலோசனை செய்வதற்காக); 124(A)— (இராஜத்துரோகஞ் செய்தவனுக்கு).

(2)—59

III. சிட்சை ஊழியஞ் செய்தல்.

இ. பி. கொ. பிரிவு 56 யாதொரு ஐரோப்பியனாவது அமரிக்கா தேசத்தானாவது தீபாந்திர சிட்சை விதிக்கக் கூடுமான காரியத்தைச் செய்து தண்டிக்கப் பட்டால், அவர்கள் சிட்சை காலத்தில் ஊழியஞ் செய்ய வேண்டிய தவசியம்.

IV. காவல்.

a) பதினான்கு வருஷங்களுக்கு காவல் விதிக்கப் படவேண்டிய இ. பி. கொ. பிரிவுகள்:—392—(கொள்ளையடிப்பதற்கு); 115—(மரண தண்டனைக்காவது, தீவாந்திர சிட்சைக்காவதுஉட்பட்டயாதொருகுற்றத்திற்கு எவனாவது உடந்தையாயிருந்து அதினாலே அந்தகுற்றஞ் செய்யப்படாத பட்சத்திலும், அந்த உடந்தையினாலே உபத்திரவ முண்டு பண்ணுகிற காரியஞ்செய்யப்பட்டாலும்); 222—(சிட்சைக்குள்ளான ஒருவனை சர்க்கார்உத்தியோகஸ்தன் பிடிக்கவேண்டியிருந்தும் பிடிக்காமலிருந்தால்); 457—(காவலில் வைக்கும் படியான குற்றஞ் செய்யும் பொருட்டு இராக்காலத்தில் பதுங்கியிருந்து வீட்டினிடமாய் நுழைவதற்கும்,கன்னமிடுவதற்கும்); 458—(எவனுக்காவது துன்பமுண்டு பண்ணுவதற்கு ஆயத்தஞ் செய்து கொண்டு இராக் காலத்தில் பதுங்கியிருந்து வீட்டினிடமாய் நுழைவதற்கும், கன்னமிடுவதற்கும்).

(b) பத்துவருஷக் காவலுக்குப் பிரிவுகள்:—194—(ஒருவனை மரண தண்டனைக் குள்ளான குற்றத்தைச் செய்தவனென்று தீர் மானிப்பிக்க வேணுமென்ற எண்ணத்தோடு பொய் சாட்சி சொன்னாலும் உண்டு பண்ணினாலும்); 364—(கொலை செய்யும் பொருட்டு மனிதர்களைத் திருட்டுத் தனமாய்க் கொண்டு போனாலும் அக்கிரமமாய் இட்டுக் கொண்டு போனாலும்); 392—(கொள்ளை யடிப்பதற்கு); 394—(கொள்ளை யடிக்கையில் மனதாரத் துன்புமுண்டு பண்ணுவது); 396—(பலர் கூடி கொள்ளையடிக்கையில் கொலை செய்வதற்கு); 399—(பலர்கூடி கொள்ளையடிக்க ஆயத்தம் பண்ணுவதற்கு); 400—(கொள்ளை யடிக்கிற கூட்டத்தில் சேர்ந்திருப்பதற்கு); 412—(பலர்கூடிக் கொள்ளை யடித்துத் திருடின சொத்தை அயோக்கியமாய் வாங்குவதற்கு); 436—(வீடு முதலியவைகளை யழிக்கவேணு மென்கிற எண்ணத் தோடு நெருப்பைக் கொண்டாவது, வெடிகிளம்பத்தக்க வஸ்துவைக் கொண்டாவது கெடுதி செய்வதற்கு); 439—(திருட்டு முதலியவை செய்யவேண்டு மென்கிற எண்ணத்தோடு கப்பலை மேட்டிலாவது, கரையிலாவது வேணு மென்று கட்டவைப்பதற்கு); 449—(மரண தண்டனைக்குள்ளான குற்றத்தைச் செய்யும் பொருட்டு வீட்டினிடமாய் நுழைவதற்கு); 450—(ஆயுசுபரியந்தம் தீபாந்திர சிட்சைக்கு ஹேதுவான குற்றத்தைச் செய்யும் பொருட்டு வீட்டினிடமாய் நுழைவதற்கு); 467—(பெறுமானபத்திரம் அல்லது மரண சாஸனத்தைச் சிருஷ்டனை செய்வதற்கு); 493—(நியாயமாய் விவாகஞ்செய்து கொண்டதாக பிறர் நம்பும்படி மோசம்பண்ணி ஒரு ஸ்திரியைத் தன்னோடு கூட வாழும்படி செய்தா லதற்கு); 495—(பின்பு விவாகஞ்செய்து கொள்ளுகிற நபரோடு முன்னைய விவாக சங்கதியைச் சொல்லாமல் மறைந்து மேற்படி குற்றத்தைச் செய்தா லதற்கு).

(c) 10 வருஷத்துக்கு மேற் படாமலும் 7-வருஷத்துக் குறையாமலும் காவல் விதிக்கப் படவேண்டியவிதிகள்:—397—(கொள்ளையடிக்கையிலாவது பலர்கூடி கொள்ளை யடிக்கை

யிலாவது மரணம் அல்லது கொடுந் துன்ப முண்டுபண்ண எத்தனப்படுவதற்கு) ; 398—மரணமுண்டு பண்ணத்தக்க ஆயுதத்தைத் தரித்துக் கொண்டு கொள்ளை யடிக்கவாவது பலர் கூடி கொள்ளை யடிக்கவாவது எத்தனப் படுவதற்கு).

(*d*) ஏழுவருஷக் காவலுக்கு இ. பி. கொ. பிரிவுகள் :—**216(A)**—(கொள்ளை யடிப்பவர் களுக்காவது, கூட்டுக் கொள்ளை யடிப்பவர் களுக்காவது இருக்க இடங்கொடுத்ததற்கு) ; **380**—(குடியிருப்பு வீடு முதலானதில் திருடு வதற்குத்தண்டனை); 381—(குமஸ்தாவகையரு உத்தியோகஸ்தனுவது வேலைக்காரனுவது தன் எஜமானனுடைய ஸ்வாதீனத்திலிருக்கிற சொத்தைத் திருடுவதற்கு) ; 393—(கொள்ளை யடிப்பதற்கு) ; 401—(திரிந்துகொண்டிருக்கிற திருடர் கூட்டத்தில் சேருவதற்கு) ; 402—(சேர்ந்து கொள்ளை யடிக்கும் பொருட்டு ஐமை கூடுவதற்கு) ; 404—(ஒருவனிறந்து போகுங் காலத்தில் அவனுடைய ஸ்வாதீனத் திலிருந்த சொத்தை அயோக்கியமாய் உப யோகித்துக்கொண்டதற்கு); 407—(கூலிக்குச் சாமான் கொண்டு போகிறவன் முதலானவர் கள் தங்களிடத்தில் ஒப்பிக்கப்பட்ட சொத் தை அநியாயமாய் அபகரிப்பதற்கு) ; 408—(குமஸ்தாவகையரு உத்தியோகஸ்தனுவது வேலைக் காரனுவது தன்னிடத்தில் ஒப்பிக்கப் படுகிற சொத்தை அநியாயமாய் அபகரிப் பதற்கு) ; 420—(சொத்தை ஒப்பிக்கும்படி மோசஞ் செய்து அயோக்கியமாய் உடன் படுத்து வதற்கு) ; 451—(காவலில் வைக்கும் படி யானக் குற்றத்தைச் செய்யும் பொருட்டு வீட்டினிடமாய் நுழைவதற்கு) ; 452—(எவ னுக்காக துன்பமுண்டு பண்ணுவதற்கு ஆயத் தஞ் செய்து கொண்டு வீட்டினிடமாய் நுழை வதற்கு);466—(யாதொரு கோர்ட்ரிகார்ட்டை யாவது ஜனனமுதலிய சர்க்கார் ரிஜிஸ்டரை யாவது சிருஷ்டனை செய்வதற்கு); 468—(மோசஞ் செய்யும் பொருட்டுச் சிருஷ்டனை செய்வதற்கு) ; 472—(பெறுமான பத்திரம் அல்லது மரணசாஸனம் சிருஷ்டனை செய்ய வேண்டு மென்கிற எண்ணத்தோடு கள்ள முத்திரை முதலான ஆயுதத்தைச் செய்தா லும், வைத்துக்கொண்டிருந்தாலும்) ; 477—(யாதொரு மரண சாஸனத்தை மோசடியாய் கிறுக்குதல், அழித்தல் முதலியவை செய் தால்); 477 (A)—(கணக்குகளைப் பொய்யாக்கு வது) ; 494—(ஒருஸ்திரீ தன் புருஷன் உயிரோ டிருக்கையிலாவது, ஒரு புருஷன் தன் பெண் சாதி உயிரோடிருக்கையிலாவது வேறொரு விவாகஞ் செய்துகொண்டால்) ; 496—(நியாய மான விவாகமல்லாமல் மோசமான எண்ணத் தோடு விவாகச் சடங்கு நடத்திக் கொண் டால்) ; 506—(அநியாயமாய்ப் பயப்படுத்து வதற்கு).

(*c*) ஐந்து வருஷக்காவலுக்குட் பட்டபிரிவு கள்:—212—(குற்றஞ்செய்தவனுக்கு இருக்க இடங்கொடுப்பதற்கு); 239—(எவனுவது கள்ள நாணயமென்று தெரிந்து தன்னிடம் வைத்துக் கொண்டிருப்பதை வேறொருவனுக்குக் கொடுப் பதற்கு) ; 250—(ஏவனுவது மாறுபாடு செய் யப்பட்ட நாணயமென்று தெரிந்து தன்னிடத் தில் வைத்துக்கொண்டிருப்பதை வேறொருவ னிடத்தில் ஒப்புவித்ததற்கு); 253—(வாங் கினபோது சர்க்காரின் நாணயம் மாறுபட்டிருக் கிறதென்று தெரிந்து வாங்கி அதைத் தன்னி டத்தில் வைத்துக்கொண்டிருந்தால்) ; 429—(மாடு, குதிரை முதலானவைகளையாவது,ரூ.50 பெறுமான பிராணியையாவது கொன்றாலும், நொண்டியாக்கினாலும், கெடுதிசெய்வதற்கு) ; 432—(பொதுவான ஜலதாரையில் தண்ணீரை வடிய வொட்டாமல் புரளும்படி செய்தாவது, தடங்கல் செய்தாவது சேதமுண்டுபண்ணுவ தற்கு) ; 440—(மரணத்தையாவது துன்பத் தையாவது உண்டுபண்ணுவதற்கு ஆயத்தஞ் செய்யப்பட்ட பின்பு கெடுதிசெய்வதற்கு) ;

காவலில் வைக்கும்படியான குற்றஞ் செய்யும் பொருட்டு இராக்காலத்தில் பதுங்கியிருந்து வீட்டினிடமாய் நுழைவதற்கும் கன்ன மிடுவதற்கும்) ; 497—(விபசாரத்திற்கு).

(*f*) நான்கு வருஷங்களுக்கு:— 335—(கோபமூட்டப்படுவதனாலே கொடுந்துன்பமுண்டுபண்ணினால்);

(*g*) மூன்று வருஷங்களுக்குக்காவல்; 148—(மரணமுண்டு பண்ணுவதற்கான ஆயுதந்தரித்துக்கொண்டு கலகஞ்செய்தல்); 161—(சர்க்கார் உத்தியோகஸ்தன் தனக்கு நியாயமாய்க்கிடைக்கவேண்டிய சம்பளந்தவிர வேறே யாதொருஇனும் பெற்றுக்கொண்டால்) ; 162—(யாதொருசர்க்கார் உத்தியோகஸ்தனை அக்கிரமமான முகாந்திரத்தினாலே வசப்படுத்தும் பொருட்டு எதையாவது வாங்கிக்கொள்ளுவதற்கு) ; 164-(சர்க்கார் உத்தியோகஸ்தர்களை வசப்படுத்தி லஞ்சம் பெற்றுக்கொள்ள உடந்தையாயிருக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தருக்கு) ; 181—(பிரமாணஞ் செய்திருப்பவன் சர்க்கார் உத்தியோகஸ்தனிடத்திலாவது பிரமாணஞ்செய்விக்க அதிகாரமுடைய வேறொருவனிடத்திலாவது பொய்யான வாக்குமூலங்கொடுத்ததற்கு) ; 225—(சட்டப்படி வேறொருவனைப் பிடிக்க வொட்டாமல் எவனாவது எதிர்த்தாலும் தடுத்தாலும்); 225 (A)—(விதியேற்படாத விஷயங்களில் சர்க்கார் உத்தியோகஸ்தன் பிடிக்கத் தவறிப்போவது அல்லது ஓடிப்போக வொட்டுவதற்கு); 308-(அநியாயமரணமுண்டு பண்ணுவதென்னுங் குற்றத்தைச் செய்ய எத்தனப்படுகை) ; 379-(திருட்டுக்கு) ; 384-(மெரட்டி வாங்குவதற்கு) ; 487—(சரக்கிருக்கிற சிப்பமுதலானதின் பேரில் மோசடியாய் மாறுபாடான அடையாளத்தைப் போட்டால்) ; (488-ல் சொல்லப்பட்ட மாறுபாடான அடையாளத்தை உபயோகித்தால்) ;

(*h*) இரண்டு வருஷம்:—225 (A)—(விதி ஏற்படாத விஷயங்களில் சர்க்கார் உத்தியோகஸ்தன் பிடிக்கத் தவறிப்போவது அல்லது ஓடிப்போக வொட்டுதவற்கு) ; 500—(அவதூறு செய்வதற்கு) ; 500—(அவதூறாயிருக்குமென்று தெரிந்திருக்கிற சங்கதியை அச்சுப்போட்டாலும் செதுக்கினாலும்) ; 552-(அவதூறான சங்கதி எதில் அச்சுப்போட்டாவது செதுக்கியாவது இருக்கிறதோ அதை விற்றால்) ; 504—(அமரிக்கையைக் கெடுக்கும்படி கோபமூட்டவேணுமென்கிற எண்ணத்தோடு வேணுமென்று பழித்தால்); 507-(பேர் போடாமல் எழுதுகிற சங்கதியினாலே அநியாயமாய் பயப்படுத்துவதற்கு).

(*i*) ஒரு வருஷங்காவலுக்கு பிரிவுகள் :—309-(தற்கொலை செய்து கொள்ள எத்தனப்படுகை) ; 359—(மனிதர்களைத் திருட்டுத்தனமாய்க்கொண்டுபோவது) ; 264—(கள்ளசாமானால் மோசடியாய் நிறுத்தால்) ; 267—கள்ளருண்டு மரக்கால் முதலானதுகளைச்செய்தாலும் விற்றாலும்) ; 417—(மோசஞ் செய்வதற்கு) ; 448-(வீட்டினிடமாய் நுழைவதற்கு); 482--(எவனையாவது மோசஞ்செய்யவாகிலும் கெடுக்கவாகிலும் எண்ணங்கொண்டு மாறுபாடான வர்த்தக அடையாளத்தையாவது சொத்து அடையாளத்தையாவது உபயோகிப்பதற்கு.)

(*j*) ஆறுமாதக்காவலுக்கு—172-(யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தனிடத்திலிருந்து வருகிற சம்மன் முதலானவைகள் தனக்குச் சேராமல் தப்பித்துக்கொள்ளும் பொருட்டு மறைந்து போவதற்கு) 179—(யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தன் கேட்கிற கேள்விக்கு உத்தரவு சொல்லமாட்டேனென்றால்) ; 187—(சர்க்கார் உத்தியோகஸ்தனுக்கு உதவி செய்யும்படி சட்டப்பிரகாரம் உடன் பட்டிருக்கிறவனெவனாவது அப்படி உதவிசெய்யாவிட்டால்)

228—(நியாய விசாரணைசெய்யும் ஒருசர்க்கார் உத்தியோகஸ்தரை எவனாவது வேணுமென்று அலட்சியஞ் செய்தாலும், தடங்கல் பண்ணி னாலுமதற்கு); 291—(ஜனங்களுக்கு இடைஞ் சல் உண்டுபண்ணுவதை விட்டுவிடும்படி உத் திரவு செய்யப்பட்ட பின்பு பின்னும் அப்ப டியே செய்தால்); 284-(விஷமுள்ள வஸ்துவை கையாளுவதில் அஜாக்கிரதையாயிருந்தால்); 289-மாடு, குதிரைமுதலிய பிராணிகள் விஷய மாய் அஜாக்கிரதை செய்தால்);

(*k*) மூன்றுமாதக் காவல்:—

180—(வாக்கு மூலத்தில் கையெழுத்துப் போட மாட்டேனென்றால்); 292—(காமாதுர சம்பந்தமான புஸ்தகங்களை விற்பனை முதலி யவை செய்தால்); 294—(காமாதுரமான பாட் டுப்பாடினால்); 336—(பிறருடைய பிராண க்காவது, சரீரக்ஷேமத்துக்காவது அபாயமுண் டுபண்ணுகிற செய்கைக்கு);

(*l*) ஒருமாதக் காவல்:—

188—(சர்க்கார் உத்தியோகஸ்தனால் கிரம மாய்ப் பிரசித்தஞ் செய்யப்படுகிற உத்திரவுக் குட்படா விட்டால்); 341—(அக்கிரமமாய்த் தடுப்பதற்கு தண்டனை); 358—(அதிக்கோப மூட்டப் படுவதினாலே தாக்கினாலும் அநியாய மாய்ப்பலவந்தஞ் செய்தாலும்); 334—(கோப மூட்டப் படுவதினாலே மனதார துன்பமுண்டு பண்ணினால்); 490—(கப்பலிலாவது, கரைவழி யாகவாவது பயணம் போகையில் ஊழியஞ் செய்ய உடன்பட்டிருக்கிறபடி நடவாவிட் டால்); 492—(எஜமானனுடைய செலவிலே எவ்விடத்திற்கு வேலைக்காரன் கொண்டுபோக ப்பட்டாலும் அங்கே ஊழியஞ்செய்வதாக ஒப் புக்கொண்டு பிறகு நடவாவிட்டால்);

(*m*) 24-மணி காலம் காவல்:—510—(ஒரு குடியன் ஜனங்கள் நடமாடுகிற இடத்திலே துர்மார்க்கமாய் நடந்தால்).

V. சொத்தைப் பறிமுதல் செய்வது.

(*a*) மொத்த சொத்தையும் பறிமுதல் செய் யவேண்டிய இ. பி கோ. பிரிவுகள்:— 62-(மர ணம், தண்ணீர்மேலேற்றுகை அல்லது சிறைச் சாலையில் வைப்பது இந்தத் தண்டனை களுக் குட்படுகிற குற்றவாளிகள் விஷயத்தில் கவர்ன் மெண்டாருக்குத் தோற்றுகிறபடி அசையும் பொருள் அசையாப் பொருள்கள் யாவற்றை யும் சர்க்காரில் பரிமுதல் செய்து கொள்ள லாம்); 121—(சக்கிரவர்த்தியின் பேரில் யுத் தஞ் செய்தாலும், யுத்தஞ் செய்ய எத்தனப் பட்டாலும், உடந்தையாயிருந்தாலும், மரண தண்டனையோ அல்லது தீபாந்திர சிட்சை களோ அல்லாமல் அவனுடைய சொத்து முழு வதும் பறிமுதல் செய்யப்படும்); 122-(சக்கிர வர்த்தியின் பேரில் யுத்தஞ் செய்யவேணு மென்கிற எண்ணத்தோடு மனிதர்களையாவது, ஆயுதமுதலிய யுத்தசாமான்களையாவது சேர்த் தால், ஆயுசு பரியந்தம் தீபாந்திர சிட்சைக் காவது, 10-வருடத்திற்கு அதிகப்படாமல் இருவகைக் காவலில் ஒன்றுக்காவது உள்ளாகு வதல்லாமல் அவனுடைய சொத்து முழுதும் சர்க்காரால் பறிமுதல் கொள்ளப்படும்).

(*b*) வாடைகையையும் லாபத்தையும் பறி முதல் செய்வது:—62-(ஏழு வருஷத்திற்காகி லும் அதற்கு மேற்பட்டாகிலுமான தீவாந் திர சிட்சையாகிலும், அல்லது சிறைச் சாலை யில் வைக்கப் பட்டிருந்தாலும், எவ்வளவு கா லம் அத்தண்டனையை யனுபவிக்க வேண்டு மோ அதுவரையில் ஒருவனுடைய அசையும் பொருள் அசையாப் பொருள்களிலிருந்து வருகிற வாடகையிலும், லாபத்திலும் அவனு டைய குடும்பத்தாருக்கும் அவனை நம்பினோர் களுக்கும் எவ்வளவு கொடுக்கலாமென்று கவர்ன்மெண்டாருக்குத் தோற்றுகிறதோ அது போக மீதியை சர்க்காரில் சேர்த்துக் கொள்ளப்படும்).

(c) குறிப்பிட்ட சொத்தைப் பறிமுதல் செய்வது 126—(சக்கிரவர்த்தியும் சமாதானத்துடனிருக்கும் எந்த சமஸ்தானத்திலாவது ஒருவன் கலாபஞ்செய்தோ, அல்லது செய்ய எத்தனித்தோ, 7-வருஷத்திற்கதிகப்படாத இரண்டு வகைக்காவலிலெதுவாகிலும் வைக்கப்படுவதன்னியில் அப்படி கலாபஞ்செய்வதற்கு உபயோகித்ததாகவாவது, உபயோகிக்க எத்தனிக்கப்பட்டதாகவாவது அல்லது அந்த கலாபத்தில் சம்பாதித்த தாகவாவதிருக்கிற யாதொரு பொருளும் பறிமுதல் செய்யப்படும்; 127—(ஷை குற்றங்கள் செய்தவனுடைய பறி முதல் செய்த சொத்தென்று தெரிந்திருந்தும் எவனாவது அதைவாங்கினால், 7-வருஷத்திற்கதிகப்படாத இருவகைக் காவல்களிலொன்றை யடைவதன்னியில், அப்படி வாங்கிக்கொண்ட சொத்தும் பறி முதல் செய்யப்படும். 169—(இன்னபொருளை சர்க்கார் உத்தியோகஸ்தன் விலைக்கு வாங்கவாவது, ஏலத்திலெடுக்கவாவது கூடாதென்றிருக்க, அவன் தன் பேரிலோ, மற்றொருவர் பேரிலோ, கூட்டாகவே வாங்கினாலும், ஏலத்திலெடுத்தாலும், 2-வருஷத்துக்கு அதிகப்படாதவெறுங்காவில் தண்டனை யடையவதன்னியில் அந்தப்பொருள் வாங்கப்பட்டிருந்தால், அது சர்க்காரால் பறி முதல் செய்யப்படும்.

NOTES ON THIS MONTH'S DECISIONS.

நிகழ் மாதத் தீர்ப்புகள்.

5—10—1914.

அப்பீல் நம்பர் 252 of 1911.

ஜட்ஜகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கர நாயர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.

லாபாயின்ட்:—பாகிக்கக்கூடாத ஜமீன்.

ஐகோர்ட் தீர்ப்பு.

ஒரு சேர்ந்த ஹிந்துகுடும்பத்தைச் சேர்ந்த ஒரு மெம்பர் ஒரு பாகிக்கப்படக்கூடாத ஜமீனுக்கு பட்டத்துக்கு வர பாத்தியம்பாராட்டி வியாச்சியம் கொண்டு வந்தான். வியாச்சியம் வாதிக்கு பிரதிகூலமாய் முடிந்தது. வாதி வியாஜ்ஜியத்தை நடத்தும் பொருட்டு சேர்ந்த குடும்பத்தைச்சேர்ந்த சொத்து சிலவற்றை அடமானம் வைத்து விற்பனை செய்தான். இந்த அடமானத்தாலும் விற்பனையாலும் சேர்ந்த குடும்பத்திற்கு யாதொரு நன்மை உண்டாகாதபடியால் இந்த விற்பனை குடும்பத்தை கட்டுப்படுத்தாது. குடும்பத்து மற்ற மெம்பர்களின் பாகத்தையும் இந்த பராதீனம் கட்டுப் படுத்தாது என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—

அப்பீல் வாதிக்காக:—மிஸ்டர் S. சீனிவாச அய்யங்கார்.

அப்பீல் பிரதிவாதிக்காக:—மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யர்.

6—10—1914.

லெட்டர்ஸ பேடண்ட்

அப்பீல் நம்பர் 71 of 1913.

ஜட்ஜிகள்:—
சிப் ஜஸ்டிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் T.V. சேஷகிரி அய்யர்.

லாபாயின்ட்:—அந்நியதேசத்து கோர்ட்டுக் தீர்ப்புகள்.

ஐகோர்ட் தீர்ப்பு.

பிரிட்டிஷ் இந்தியா கோர்ட்டுகளுக்கும் சுதேச சமஸ்தான கோர்ட்டுகளுக்கும் உள்ள வித்தியாசத்தை போக்கடித்து விடவேண்டுமென்பது, ஸிவில் ப்ரொசிஜர் கோட் 47-வது பிரிவின்படி கவர்ன்மெண்டார் பிரசுரத்திருக்கும் விளம்பரத்தின் கருத்தல்ல. கொச்சி சமஸ்தானத்திலிருக்கும் திருச்சூர் கோர்ட்

டிக்ரி அந்நியதேசத்து டிக்ரி அந்த டிக்ரி ஒரு பிரிட்டிஷ் கோர்ட்டில் நிறைவேற்றப் பட எத்தனிக்கப்பட்டால் கடனாளி அந்த டிக்ரியை நிறைவேற்றுவதற்கு பிரிட்டிஷ் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை யென்று கக்ஷி சொல்லலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—

அப்பீல் வாதிக்காக மிஸ்டர் K.K. பாண்டலே.
அப்பீல் பிரதிவாதிக்காக:—மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யர்.

அப்பீல் நம்பர் 216 of 1911.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கர நாயர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங்.

லாபாயின்ட்:—பாகிக்கப்படக் கூடாத ஜமீன்.

ஐகோர்ட் தீர்ப்பு.

பாகிக்கப்படக் கூடாத எஸ்டேட்டின் ஜமீன்தார் ஒரு இளைய மெம்பருக்கும் அந்தமெம்பருடைய வார்சுகளுக்கும் சாஸ்வதமாக ஜீவனம்சத்துக்காக ஒரு குறிப்பட்ட தொகையை கொடுத்துவருவதாக ஒப்பந்தஞ்செய்து அந்த தொகைக்கு ஜமீனை ஈடுகாட்டி எழுதிகொடுப்பதற்கு அருகற்றவர். சாஸ்வதமாக அப்படி பராதினம் செய்வது டிரான்ஸ்பர் ஆவ் ப்ராபர்ட்டி (Transfer of Property Act) ஆக்ட்டின் நிபந்தனைக்கு விரோதமாகிறது என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள் :—

அப்பீல்வாதிக்காக மிஸ்டர் S. சீனவாச அய்யங்கார்.

அப்பீல் பிரதி வாதிக்காக மிஸ்டர் கோவிந்த ராகவய்யர்.

9—10—1914.

லெட்டர்ஸ் பேடண்ட் அப்பீல் 41 of 1913.

ஜட்ஜிகள் :—சீப் ஜஸ்டிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

லாபாயின்ட்:—சென்னப்பட்டணம் காட்டு இலாகா ஆக்ட்.

ஐகோர்ட் தீர்ப்பு.

ஒரு கேசில் ஒரு குறிப்பிட்ட துண்டு நிலம் ஒரு குறிப்பிட்ட மிட்டாவிற்குள் சேர்ந்ததாவென்று, ஒரு பிரஸ்னை உண்டானபோது கவர்ண்மெண்டார் பக்கத்தில் தீர்ப்பு சொன்ன ஒரு எல்லை கமிஷனருடைய தீர்மானமே முடிவான தீர்மானமே என்று கக்ஷி சொல்லப்பட்டது. காட்டு இலாகா ஆக்ட்டின்படி (Madras Forest Act) அந்த தீர்மானத்திற்கு விரோதமாய் அப்பீல் செய்துகொள்ளப்பட்டிருக்கிறபடியால் அந்தத் தீர்ப்பு முடிவான தீர்ப்பாக மாட்டாதென்று இ. லா. ரி. 11. சென். 169 தீர்ப்பை பின்பற்றி தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—

அப்பீல் வாதிக்காக மிஸ்டர் L. A. கோவிந்த ராகவய்யர்.

அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் னுஜன்ட் கிராண்ட்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.

லாபாயின்ட்:—ஹிந்து லா.

வியாச்சியச் சுருக்கம்:—பிதாவும் புத்திரனும் சேர்ந்த ஒரு ஹிந்து குடும்பத்தின் தகப்பன் குடும்பச் சொத்தை விற்பதற்கு ஒப்பத்தஞ் செய்தார். விற்பனை செய்வதற்கு யாதொரு அவசியமில்லை யென்று ருஜூப்பட்டது.

ஐகோர்ட் தீர்ப்பு.

அந்த ஒப்பந்தம் ஊர்ஜிதப்படக்கூடியதல்ல என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—

அப்பீல்வாதிக்காக மிஸ்டர் T. V. வெங்கட [ராமய்யர்.

அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் T. பிரகாசம்.

இரண்டாவது அப்பீல் நம்பர் 355 of 1911

லாபாயின்ட் :—இந்து லா.

வியாஜ்ஜியச்சுருக்கம்:—ஒரு சேர்ந்த குடும்பத்தின் மெம்பர்கள் பாகப்பிரிவினை செய்து கொள்ளும்போது குடும்பத்தைச்சேர்ந்த விவாகமாகாத ஒரு மெம்பருடைய விவாகச்சிலவிற்காககுடும்பப்பொது ஐவேஜுவிலிருந்து பிரத்தியேகமாய் பணம் எடுத்து வைக்கப்பட்டது. இது சம்பந்தமாய் நேரிட்ட அப்பீலை ஜட்ஜி மிஸ்டர் சுந்தரமய்யரும் ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யரும் விசாரணை செய்து பேதப்பட்ட அபிப்பிராயங்கள் கொண்டார்கள். ஜட்ஜி மிஸ்டர் சுந்தரய்யர் விவாகச்சிலவிற்காக பணம் எடுத்துவைத்து செலாவணியாகக் கூடியதென்று அபிப்பிராயப்பட்டார். ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர் சிலாவணியாகாதென்று அபிப்பிராயப்பட்டார். ஆகையால் ஸிவில் ப்ரொஸிஜர் கோட் 98-வது பிரிவின்படி ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சருடைய தீர்மானத்திற்கு அனுப்பப்பட்டது.

ஐகோர்ட் தீர்ப்பு.

குடும்ப ஐவேஜுவிலிருந்து குடும்பச்சொத்துகளை பாகப் பிரிவினை செய்துகொள்ளும் போது விவாகமாகாத மெம்பரின் விவாகச்சிலவுகளுக்காக பிரத்தியேகமாய் பணம் எடுத்து வைப்பது கோர்ட்டாரால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள :—

அப்பீல்வாதிக்காக:—மிஸ்டர் T. நடேச [ய்யர்.

அப்பீல் பிரதிவாதிக்காக:—மிஸ்டர் C. V. [அனந்தகிருஷ்ணய்யர்.

S. A. No. 1120 of 1913.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹானே.

லாபாயின்ட்:—விடுதலை பத்திரம்.

ஐகோர்ட் தீர்ப்பு:—வாதி ஒரு விடுதலை ஆதரவை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஸ்தாபர சொத்திற்கு பாத்தியம் பாராட்டி வியாச்சியம் கொண்டுவந்தான். வியாச்சிய விசாரணையில் விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தவன் சொத்தில் தன் பாத்தியதை எல்லாம் விட்டு விட்டானென்று ருஜுப்பட்டது. ஒரு அந்நியனுக்கும் வாதிக்கும் நடந்துவரும் ஒரு வியாச்சியத்தில் மேற்சொல்லப்பட்ட ஆதரவு ஒரு கிரய சாசனம்போல வலுவுடையதாக இருக்கமாட்டாதென்று தீர்ப்பு செய்யப்பட்டது.

லாயர்கள்:—

அப்பீல் வாதிக்காக:—மிஸ்டர் A. கிருஷ்ண சாமி அய்யர்.

அப்பீல் பிரதிவாதிக்காக:—மிஸ்டர் C. V. அனந்தகிருஷ்ணய்யர்.

C. S. No. 253 of 1913.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல்.

லாபாயின்ட்:—உயிலுக்கு ப்ரோபேட் வாங்கினது.

ஐகோர்ட் தீர்ப்பு.

வாதி 1-4 பிரதிவாதி பேர்களில் கூட்டு வியாபார கணக்கு வழக்குகளுக்காகவும் லாபத்திற்காகவும் வியாச்சியம் கொண்டுவந்தார். வியாச்சியம் நடந்துகொண்டிருக்கும்போது இரண்டாவது பிரதிவாதி 23-11-1913-ல் இறந்துபோய்விட்டான். இறந்து போகும் போது உயில் எழுதி வாதியையும் இன்னொருவரையும் எக்ஸிகியூட்டர்களாக நியமித்துவிட்டு இறந்துபோய்விட்டான். வாதி (5-3-1914)-ல் ப்ரோபேட்டிற்கு மனுகொடுத்தார். மற்றொரு எக்ஸிகியூட்டர் தன் உத்தியோகத்தை

விட்டுவிட்டார். 18-9-1914-ல் கோர்ட்டார் இரண்டாவது பிரதிவாதி சம்மந்தப்பட்ட வரையில் வியாச்சியம் முடிந்துபோய்விட்ட தென்று கூறிவிட்டார்கள். இப்படி கூறின தை ரத்து செய்வதற்காக வாதி 2-10-1914-ல் இந்த மனு செய்துகொண்டிருக்கிறார். இந்த மனுவில் உயில் கர்த்தாவினுடைய புத்திரன் தம்மையும் மற்றொரு எக்ஸ்கியூட்டரையும் பயமுறுத்தி கொண்டிருந்ததாகவும் இறந்துபோன இரண்டாவது பிரதிவாதிக்கு சட்டப்பிரகாரமுள்ள பிரதிநிதியை சேர்ப்பதற்கு வழிதெரியாததால் மனுசெய்துகொள்ள தாமதப்பட்ட தென்றும் காரணம் சொல்லியிருந்தார். இந்தமனு காலாவதி தோஷத்திற்கு உள்ளாகி யிருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது. ஏனென்றால் சட்டப் பிரகாரமுள்ள பிரதிநிதியை சேர்க்காததற்கு சொல்லப்பட்டிருக்கும் காரணம் தகுந்த காரணமல்ல வென்று தீர்மானிக்கப்பட்டது.

இரண்டாவது அப்பீல் நம்பர் 1010 of 1913.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹானே.

லாபாயின்ட்:—பாகப்பிரிவினை.

ஐகோர்ட் தீர்ப்பு.

ஒரு கூட்டு வியாபாரம் கலைந்துபோன பிறகு பாகஸ்தர்களில் ஒருவன் மற்ற பாகஸ்தர்களுடைய சம்மதமின்றி கூட்டுவியாபாரக் கடனுக்காக ஆதரவு எழுதிக் கொடுத்தால் அந்த ஆதரவு மற்ற பாகஸ்தர்களை கட்டுபடுத்த மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—
அப்பீல்வாதிக்காக:—மிஸ்டர் B. சீத்தாராமராவ்.
அப்பீல் பிரதிவாதிக்காக:—மிஸ்டர் C. V. அனந்தகிருஷ்ணய்யர்.

லெட்டர்ஸ் பேடண்ட் அப்பீல் நம்பர் 37 of 1914.

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

லாபாயின்ட்:—ஒப்பந்தத்தை மீறுவது.

ஐகோர்ட்டார் தீர்ப்பு.

ஏ என்பவன் தன்னுடைய நிலத்தை விற்பதாக பி என்பவனிடம் ஒப்பந்தம் செய்து அட்வான்சு தொகையை டிபாஸிட்டாக கட்டினான். ஒப்பந்தம் தவறினால் டிபாஸிட் தொகையை இழந்துவிடுவதாகவும் அதன்றி நஷ்டத்தை கட்டிக் கொடுப்பதாகவும் எழுதிக் கொடுத்தான். ஏ என்பவன் நிலத்தை விற்கவில்லை. பி என்பவன் நஷ்ட வியாச்சியம் கொண்டுவந்தான். ஏ என்பவன் டிப்பாஸிட் தொகையை இழக்கிறதுமல்லாமல் நஷ்டம் கட்டிக் கொடுக்கிறதாக எழுதிக் கொடுத்திருந்தபோதிலும் பி கிரயம் பெற்றுக் கொள்ளாததினால் அடைந்திருக்கும் மொத்த நஷ்டத்தில் டிபாஸிட் தொகையை கழித்துக்கொண்டுபாக்கி தொகைக்கு வியாச்சியம் கொண்டுவர பாத்தியமுடையவனென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—
அப்பீல்வாதிக்காக:—மிஸ்டர் S. வரதாசாரி
அப்பீல் பிரதிவாதிக்காக—மிஸ்டர் C. R. மணிய அய்யர்.

HINDU LAW.
இந்து லா.
ADOPTION.
ஸ்வீகாரம்.

அடுத்த அனந்தரவார்சு, ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளவிதவைக்கு சம்மதம் கொடுத்திருப்பது தூரமாயுள்ள அனந்தரவார்சுகள் அந்த ஸ்வீகாரத்தை ஆக்ஷேபிப்பதற்குள்ள அதிகாரத்தை எடுத்துப்போடுகிறது. அதாவது அடுத்த அனந்தரவார்சு சம்மதம் கொடுத்துவிட்டால் தூரமாயுள்ள அனந்தரவார்சுகள் அந்த ஸ்வீகாரத்தை ஆக்ஷேபிக்க முடியாதென்று

சோஜாராம் ங. ராம் ராம் கேசில் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. 22 இ. கே. 542.

ADOPTION BY A WIDOW.

விதவை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளுகிறது.

ஸ்வீகாரபுத்திரனின் சொந்த தகப்பனுடன் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப்போகிற விதவை அடியிற்கண்டபடி உடன்படிக்கை செய்து கொண்டாள். அதாவது என்னவென்றால் விதவை எப்போதும்போல் எஸ்டேட்டை மானேஜ் மெண்டு செய்துகொண்டு வரவேண்டும். எஸ்டேட்டிற்கு வரவேண்டிய வருமானத்தை வசூல் செய்யவும் செலவுகளை பட்வாடா செய்யவும் உள்ள அதிகாரத்தை அவளே வைத்துக்கொள்ளவேண்டும். விதவை இறந்து போனபிறகு ஸ்வீகாரபுத்திரனுக்கு மேற் சொல்லப்பட்ட அதிகாரமெல்லாம் வரவேண்டும் என்று எகிரிமெண்டு செய்துகொண்டாள். அந்த உடன்படிக்கை செலாவணியாகாது. புருஷோத்தமம் ங. லகாம்பாய்கேசில் பம்பாய் ஐகோர்ட்டார் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 16 பம். லா. ரி. 57.

MAINTENANCE.

ஜீவனும்சம்.

பாகிக்கப்படக்கூடாத எஸ்டேட்டிற்கு சொந்தமாயுள்ள ஒரு குடும்பத்தின் இளைய மெம்பரின் விதவை எஸ்டேட்டிலிருந்து ஜீவனும்சம் பெற்றுக்கொள்வதற்குபாத்தியமுடையவளென்று தீர்மானிக்கப்பட்டது. ரெங்கப்பா காளப்பா ங. களந்தே ஆயாள் கேசில்மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் மிஸ்டர், டயாட்ஜிகூடிய சென்னப்பட்டணம் ஐகோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 26 ம லா. ஜெ. 205.

JOINT FAMILY.

சேர்ந்த குடும்பம்.

ALIENATION BY MANAGER

மானேஜரால் பராதீனம்.

ஒரு சேர்ந்த குடும்பத்தின் மானேஜர் மேற்படி குடும்பத்தின் மைனர்களுக்கு சட்டப்பிரகாரமுள்ள கார்டியனுக இல்லாமற்போன போதிலும் அவர் ஒரு நிலத்தை விற்பனை செய்தது மைனர்களுக்கு நன்மைபயக்கக்கூடியதாயிருந்தால் அந்த பராதீனம் செல்லுபடியுள்ளதென்று. ராம்சாரன் ங. மச்சின்லால் கேசில் பஞ்சாப்சீப் கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 22 இ. கே. 633.

ALIENATION BY BROTHER.

சகோதரனல் செய்யப்பட்ட பராதீனம்.

ஒரு பாகம்பிரித்துக்கொள்ளாத ஒரு ஹிந்து குடும்பத்தின் மூன்று சகோதரர்களின் ஒருவன் மேற்படி குடும்பச் சொத்தை மற்ற இரண்டு சகோதரர்களுடைய முழு சம்மதத்துடன் பராதீனம் செய்தால் அந்தப் பராதீனம் மற்ற சகோதரர்களை கட்டுப்படுத்துமென்று தாக்கூர்டின் ங. சீத்தாசுகாய் கேசில் அலகாபாத் ஐகோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 12 அ. லா ஜெ. 52.

ALIENATION BY FATHER

தகப்பனுல் செய்யப்பட்ட பராதீனம்.

பிதிராச்சிய சொத்தை தகப்பன் பராதீனம் செய்ததை ரத்து செய்வதற்காக புத்திரர்கள் வியாச்சியம் கொண்டுவந்தால் குடும்பத்திற்கு புராதீனத்துடன் இருந்ததென்றும் அல்லது பராதீனம் செய்வதற்கு அவசியமான காரணமிருந்ததென்றும் ருஜுப்படுத்தவேண்டிய பொறுப்பு பராதீனம் பெற்றவனுடையது என்று சீத்தாராம் நாயுடு ங. பாலகிருஷ்ண நாயுடு கேசில் சென்னப்பட்டணம் ஐகோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டது. 15 ம லா. ட. 78.

ALIENATION BY MANAGER.

மானேஜரால் செய்யப்பட்ட பராதீனம்.

ஒரு சேர்ந்து ஹிந்து குடும்பத்தின் மானேஜரால் செய்யப்பட்ட பராதீனம் மற்ற மெம்பர்களையும் கட்டுப் படுத்தக்கூடும். எப்படியிருந்தாலென்றால் பராதீனம் பெற்றுக் கொண்டவன் என்ன காரணத்திற்காக பராதீனம் செய்யப் படுகிறதென்றும் அந்தக் காரணம் அவசியமான காரணமா வென்று உண்மையில் விசாரணை செய்ததாக ருஜுப்படவேண்டும். பராதீனம் செய்யப்பட்டதால் கிடைத்த தொகை அந்த அவசியமான காரியத்திற்கும் உபயோகிக்கப் படுத்தப்பட்டதாவென்று ருஜுப்படுத்த அவனுல் சாத்தியப்படாவிட்டால் அதனுல் பாதகமில்லை என்று கெங்க செட்டி ங. ராமமூர்த்தி கேசில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர், மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் இவர்கள் கூடிய சென்னப்பட்டணம் ஐகோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 1. லா. வீ. 249.

MAINTENANCE.

ஜீவனும்சம்.

Step-mother's Rights.

மாற்றான் தாயாருடைய பாத்திதைகள்.

சொந்தபுத்திரனும் மாற்றான் தாயார்புத்திரனும்பாகபிரிவினை செய்து கொண்டபிறகு சொந்த புத்திரனிட மிருந்து மாற்றான்தாய் ஜீவனும்சம் பெற பாத்தியதை யற்றவளென்று பிஷம்தாஸ் v. மனுலாதேவி கேசில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 60 ப. லா. ரா. 1914.

RATE OF MAINTENANCE.

ஜீவனும்ச விகிதம்.

ஒரு விதவைதனக்கு பிரத்தியேகமாக ஜீவனும்சம் கொடுக்க வேண்டுமென்று கேட்கப்படும் வியாச்சியத்தில் அவளுக்கு ஜீவனும்சம் விகிதம் விதிப்பதில் அடியிற்கண்ட விஷயங்கள் கவனிக்கப் படவேண்டும். அவளுடைய புருஷன் ஜீவதிசையிலிருந்த காலத்தில் குடும்பத்தை நடத்திவந்தவிதம். (2) எவ்வளவுபணம் அவளுக்கு கொடுத்தால் கூடியவரையில் அவள் சுகமாய் காலங்கழித்து வருவாள். (3) எஸ்டேட்டிலிருந்து வரக்கூடிய வருமானமும செலவு தொகைகளும் மற்ற மெம்பர்களுக்கு கொடுக்கவேண்டிய ஜீவனும்ச தொகைகளும் ஆகிய இவைகளெல்லாம் கவனிக்கப்பட்டு ஜீவனும்சவிகிதம் நிர்ணயிக்கப் படவேண்டுமென்று புஷ்பவதி தாயாரம்மாள் v. ராகவய்ய செட்டி கேசில் சென்னபட்டணம் ஐகோர்ட்டாரால் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. 15 ம. லா. ட. 951.

MARRIAGE EXPENSES.

விவாகச் செலவுகள்.

ஒருசேர்ந்த குடும்பமெம்பருக்கு விவாகச் செலவிற்கு வாங்கி கொடுக்கப்பட்ட கடன் தொகைக்கு குடும்பமுழுவதும் கட்டுப்பட வேண்டுமென்று சீனிவாச அய்யங்கார் v. திருவேங்கடத் தய்யங்கார் கேசில் சென்னபட்டணம் ஐகோர்ட்டாரால் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. 1914, ம. வீ. நோ. 282.

MARRIAGE.

விவாகம்.

விவாகமான ஒருபள்ளி ஜாதிஸ்திரீ முகம்மதிய மதத்திற்கு மாறி ஒரு முஸ்லீமை விவாகம் செய்துகொண்டாள். அவள் இந்துவாயிருக்கும்போது செய்துகொண்ட விவாகம் ஊர்ச்சிதத்திலிருக்கும் போதே இப்படிச் செய்தபடியால் அந்த இரண்டாவது விவாகம் சட்டவிரோதமென்றும் முஸ்லீம்புருஷனுக்கு பிறந்த பிள்ளைகள் சோரப்பிள்ளைகளென்று படாம்சாராவுத்தர் v. பட்டிடாபீ கேசில் ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர், ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்ஸர்கூடிய சென்னபட்டணம்ஐகோர்ட்டாரால் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. 15 ம. லா. ட. 107

CONJUGAL RIGHTS.

புருஷன்பெண்ஜாதி கூடிவாழும் பாத்திதைகள்.

புருஷன் தன்னுடன் கூடிவாழவேண்டுமென்று பெண்ஜாதி கொண்டுவரும் வியாச்சியத்தில் பெண்ஜாதி நோயாளியாயிருக்கிறாள் என்று புருஷன் கக்ஷிசொல்வது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதல்ல. அவள் தேக அசௌக்கியமுடையவளாக யிருந்தபோதிலும் அவள் புருஷனுக்குவேண்டிய சவரக்ஷணை முதலானவை செய்யமுடியாதவளாக யிருந்தபோதிலும் அவனை தன்னுடைய வீட்டிலிருக்கும்படி செய்து ஆதரித்து பராமரிக்க கட்டுப்பட்டவனென்று குப்பம்மாள் v. குப்பனுச்சாரி கேசில் தீர்மானிக்கப்பட்டது 26 ம. லா. ஜெ. 363.

PARTITION.

பாகப் பிரிவினை.

ஒரு சேர்ந்த ஹிந்து குடும்பத்தின் மெம்பர்கள் பாகப் பிரிவினை செய்துகொள்ளும்போது விவாகமாகாத மெம்பர்களுக்கு விவாகச்செலவுகளுக்காக குடும்பஐவேஜியிலிருந்து பிரத்தியேகமாய் பணம் எடுத்துவைக்கப்பட வேண்டும். ஏனென்றால் விவாகம் ஒரு சமஸ்காரம். அந்தகாரியத்திற்காக செலவிடப்படும் பணம் குடும்பபொது ஐவேஜீயிலிருந்து செய்யப்பட வேண்டும். சீனிவாச அய்யங்கார் v. திருவேங்கடத் தய்யங்கார் கேசில் சென்னபட்டணம் ஐகோர்ட்டாரால் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. 1914, ம. வீ. நோ. 280.

சந்திர ரேகா

(அற்புதமான தமிழ் நாவல்)

நீதிநூலுக்கு நூலாகவும் இன்பமான கதைக்குக் கதையாகவுமிருக்கும்படியாக

ம-ா-ா-ஸ்ரீ எஸ். எம். அப்பாசாமி நாயுடு

அவர்களால் இயற்றப்பட்டது.

வாசிக்க வாசிக்க இன்பமாயிருக்கும்.

கம்பராமாயணம், கைவல்லியம், திருக்குறள், பாரதம், பாகவதம், பகவத்கீதை முதலியவைகளிலிருந்து மேற் கோள்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

தும்ப மலர்போல வெளுப்பான கடுதாசியில் முத்துப்போன்ற எழுத்துகளால் அச்சிடப்பட்டு நேர்த்தியாகப் பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

விலை—தபால் சார்ஜ் உள்பட ரூ 1

மானேஜர்,

இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்,

117, அரமனைக்காரத் தெருவு, சென்னை.

புதியதாய் கண்டுபிடித்த ரோமசங்காரிணி என்னும்

தர்பார் சோப்.

இது தேகத்தின் எந்த பாகத்திலும் இருக்கும்

கூந்தலை இதுபூசுவதனுல் தேகத்தின் சர்மத்துக்கு எவ்வித தொந்தரவில்லாமல் ரோமத்தை எடுத்துவிடும். ஒரு தடவை வாங்கினுல் விடமாட்டீர்கள். தேகத்தின் காந்தியையும் முன்போலவே நிற்கும் சுபாவமான திடத்தைக்காப்பாற்றும் படியான சோப் இது ஒன்றே தவிர வே...ன்றும் கிடையாது. ...காலனதுகள் ...க்கு

மயிர் நரைத்து கிழவர்களைப் போல் என் காணப்படுகிறீர்கள்? எங்கள்

தர்பார் கேசலாபத்தை

ஒரு தடவை உபயோகித்தால் எந்தக் காரணத்தினுல் உண்டான நரைத்த மயிரை கறுக்கச்செய்யும். இது கிழத்தனத்தைப் போகடித்து யௌவனத்தை மயிரின் பலஹீனத்தைப் போக்கடித்து அவைகளுக்கு பலத்தையும் கொடுக்கும் வல்லமையுடையது சர்மத்துக்கு எவ்வித கெடுதியும் இல்லாமல் அதி அற்புதமாக வேலை செய்யும். ஒரு தடவை தருவித்து எங்கள் நம்பிக்கை பாருங்கள்.

...லை புருஷ் உடன் ரூ. 1 0 0

...லை அணா. 0 4 0

...ணி,